அலகு 10

# உலகிற்கு இந்தியப் பண்பாட்டின் கொடை

## கற்றல் நோக்கங்கள்

- இந்தியாவின் பண்பாட்டு மேன்மைகள் மற்றும் அறக்கோட்பாடுகள் பற்றி அறிதல்.
- இந்தியாவின் ஆன்மிகம் அதன் அடிப்படையிலான யோகா பற்றி அறிதல்.
- இந்தியாவின் பஞ்சசீலக் கொள்கை பற்றிப் புரிந்து கொள்ளுதல்.
- உலகிற்கு இந்தியா அளித்த கொடைகளான கணிதம், வானவியல், மருத்துவம் பற்றி தெரிந்து கொள்ளுதல்.
- இந்தியாவின் கலை மற்றும் கட்டடக்கலை நுட்பங்களைப் பற்றி புரிந்து கொள்ளுதல்.
- இந்தியப் பண்பாட்டின் மேன்மைகளையும், சிறப்புகளையும் அறிந்து பின்பற்றல்.

## நுழைவு வாயில்

நமதுநாடு பழைமையான பண்பாட்டைத் தன்னகத்தே கொண்டுள்ளது. வாழ்வியல் முறைகள், இலக்கியம், கணிதம், வானவியல், இசை, ஓவியம், நடனம், சிற்பம், கட்டடக்கலை போன்றவற்றில் உலகிற்கு முன்னோடியாகத் திகழ்கிறது. தேசிய ஒருமைப்பாட்டை மையப்படுத்தும், ஆன்மிக உணர்வு, இந்தியாவின் பலம் என **சுவாமி விவேகானந்தர்** குறிப்பிட்டுள்ளார். "உலகப்பொதுமறை" என்றழைக்கப்படும் திருக்குறள், தமிழர் வாழ்வியல் மற்றும் பண்பாட்டு நெறிகளைக் கூறும் சங்க இலக்கியம், இராமாயணம், மகாபாரதம், கௌதம புத்தர் தோற்றுவித்த பௌத்தசமயம் போன்றவை, உலகிற்கு இந்தியா வழங்கிய அளப்பரிய பண்பாட்டுக் கொடையாகும்.

## இந்தியப் பண்பாட்டின் மேன்மைகள்

இந்தியப் பாரம்பரியத்தின் உயரியப்பண்பு சகிப்புத்தன்மையும் பன்முகத்தன்மையுமாகும். யூதர்கள், கிறித்துவர்கள், முஸ்லீம்கள், பார்சிக்கள் போன்றோர் இந்தியாவில் குடியேறி, இந்தியப் பன்முகத்தன்மையை ஏற்றுக்கொண்டு, இந்தியப்பண்பாட்டுடன் தம்மையும் இணைத்துக் கொண்டார்கள். மதநல்லிணக்க அடிப்படையில்அனைத்துச்சமயங்களிலுமுள்ள நல்ல கருத்துகளை ஏற்றுக்கொள்ளல், பிற சமயத்தினருக்கும் மதிப்பளித்தல் போன்ற உணர்வுகளைத் தன்னகத்தே கொண்டு, சகிப்புத் தன்மையுடன் நடப்பது இந்தியர்களின் தலைசிறந்த பண்பாடாகும்.

இந்திய சமுதாயம், தருமம் என்ற அறக்கருத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. எல்லாச் சமயங்களும் எல்லா இனங்களும் சரிசமம். இஃது ஆண் – பெண் சமத்துவம் போன்ற சிறந்த கொள்கைகளைத் தன்னுள் கொண்டுள்ளது. நம் பண்பாடு இயற்கையிலுள்ள அனைத்து உயிர்களையும் உயிரற்றவைகளையும் நேசிக்கும் பண்பைக் கொண்டுள்ளது. மரம், செடி, கொடி, நதி என எல்லாவற்றையும் வணங்கும் பாங்கு, நமது உயரிய நற்பண்புகளை எடுத்துக்காட்டுவதாய் அமைகிறது.



XII Ethics_Lesson 10.indd 238 12-12-2021 21:54:40

இந்தியப் பண்பாட்டில் கட்டடக்கலை, மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. எடுத்துக்காட்டாக எல்லோரா குகைக்கோயில், அஜந்தா ஓவியம், குடைவரைக்கோயில் (மகாபலிபுரம்), லிங்கராஜா கோயில் (புவனேஸ்வர்), சூரியனார் கோயில் (கோனார்க்), நடராஜர் கோயில் (சிதம்பரம்), தஞ்சைப் பெரியகோயில் போன்றவற்றைக் கூறலாம். மேலும், சிற்பங்கள், ஓவியங்கள், நடனங்கள், நாடகங்கள், இசை போன்றவற்றில் உலகிற்கே முன்னோடியாக இந்தியப்பண்பாடு திகழ்கிறது.

"உண்மையில்லா நிலையிலிருந்து உண்மையையும், இருட்டிலிருந்து வெளிச்சத்தையும், ஒழுக்கக் கேட்டிலிருந்து விடுதலையையும்பெற்றுத்தரும்ஒருசாதனமாக அமைந்துள்ளது இந்தியப் பண்பாடாகும் ".

## அறக்கோட்பாடுகள்

**'அறம்'** என்ற சொல்லுக்குச் சான்றோர்கள் பல்வேறு பொருள்களைக் குறிப்பிடுகிறார்கள். தமிழ் இலக்கிய அகராதி, அறம் என்னும் சொல்லுக்கு **புண்ணியம், தருமம், வாழ்வியல் விதி, ஒழுக்கம்** எனப் பல பொருள்களைக் குறிப்பிடுகின்றது.

"மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் நிறை வடிவமே அறம்" என **க. அரங்கசாமி** குறிப்பிடுகின்றார்.

**உங்களுக்குத் தெரியுமா?**

'சனாதனதர்மம்' என்பதற்கு **முடிவில்லா அறம்** என்று பெயர். மனிதன் இயற்கையோடு ஒன்றிய நல்வாழ்விற்கு அடிப்படையாக விளங்குவது தர்மமேயாகும். சடங்குகளைவிட ஒழுக்கமே முக்கியம் என்று தருமம் கூறுகிறது. மனிதனின் குடும்பக்கடமைகள் சமூகக்கடமைகளாகப் போற்றப்படுகின்றன.

## நான்கு புருஷார்த்தங்கள்

வாழ்வின் உறுதிப் பொருள்களான அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் புருஷார்த்தங்கள் என்று அழைக்கிறோம். இவற்றில் வீடுபேற்றை அடைவதையே மனிதன் தம் குறிக்கோளாகக் கொள்ளவேண்டும். அதனை அடைய, வேதங்களில் சொல்லப்பட்டுள்ள வாழ்வியல் நெறிக்கோட்பாடுகளை முறையாகப் பின்பற்றிட வேண்டும் என்று நம் முன்னோர்கள் அறிவுறுத்துகின்றனர்.

## தொல்காப்பியரின் அறக்கோட்பாடு

**தொல்காப்பியர்** அகத்திணையியல் களவியல், கற்பியல், பொருளியல் முதலிய அகப்பொருள் கோட்பாடுகளையும், புறத்திணையியல் மரபியல் பற்றிய அறக்கோட்பாடுகளையும் வழங்கியுள்ளார். பழைமையான மரபையே பின்பற்றச் சொல்லும் பிற்போக்கு எண்ணம் இல்லாத தொல்காப்பியர், **'கடிசொல் இல்லைக் காலத்துப் படினே'** எனக்கூறி பழைமைக்கும் புதுமைக்கும் பாலம் அமைத்தார்.

## இதிகாசங்களில் அறக்கோட்பாடு

**வால்மீகி முனிவரால்** எழுதப்பட்ட **இராமாயணமும், வேதவியாசரால்** எழுதப்பட்ட **மகாபாரதமும்** இதிகாசங்களாகும். இராமாயணம் **'ஒருவனுக்கு ஒருத்தி', 'பெரியோருக்குக் கீழ்ப்படிதல்', 'கற்புநெறி', 'நன்றிமறவாமை', 'பிறன்மனை நோக்காதிருத்தல்', 'உண்மையே வெல்லும்'** போன்ற உயரிய அறநெறிக் கோட்பாடுகளை உலகிற்கு வழங்கியுள்ளது.

மகாபாரதம் அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்ற மனிதன் பின்பற்ற வேண்டிய நால்வகை நோக்கங்களைப்பற்றிக் கூறுகிறது. தனிப்பட்டவர்களுக்கு உரிய சிறந்த குணங்களையும், 'சூது வாழ்க்கைக்குக் கேடு', 'மண்ணாசை வேண்டாம்', 'தர்மம்வெல்லும்', 'நன்றிமறவாமை', 'சகிப்புத்தன்மை', 'தியாகம்', 'செஞ்சோற்றுக்' 'கடன்தீர்த்தல்' போன்ற அறங்கல் அனைத்தையும் இவ்வுலகிற்கு எடுத்தியம்புகிறது.

## சமண அறக்கோட்பாடுகள்

**வர்த்தமானமகாவீரர்** 'திரிரத்தினங்கள்' என்ற மும்மணிகளையும், வாழ்வியலுக்கான இல்லறக் கோட்பாடுகளையும், கர்மவினை



XII Ethics_Lesson 10.indd 239 12-12-2021 21:54:40

போன்ற அறக்கோட்பாடுகளையும் சமண சமயத்தின் மூலம் நமக்கு அளித்துள்ளார்.

### பௌத்த அறக்கோட்பாடுகள்

**கௌதம புத்தர்** மனித வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நால்வகை உயரிய உண்மைகளையும், எண்வகை பாதைகளையும் வகுத்தளித்துள்ளார். மேலும், இல்லறத்தார், துறவறத்தார் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளையும் வழங்கியுள்ளார்.

### ஔவையாரின் அறக்கோட்பாடுகள்

ஔவையார் தமது **ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி** போன்ற அறநூல்கள் வாயிலாக வாழ்வியல் அறங்களான கற்பு, தர்மம், கல்வி, பிறருக்கு உதவும் மனப்பான்மை போன்றவற்றை எளிமையாகக் கடைப்பிடிக்கும் நோக்கில் விளக்கியுள்ளார். மேலும், நல்வழி என்ற அறநூலில் **'சாதி இரண்டே இதுவே நீதி'**, **'வருவது வரும் வாடாதே'**, **'ஏர் பிடித்தோர்க்கு இணையில்லை'**, **'பசி வந்தால் பத்தும் பறந்து போகும்'** போன்ற உயர்ந்த அறக்கருத்துகளை மனித சமூகத்திற்கு வழங்கியுள்ளார்.

### திருக்குறள் கூறும் அறக்கோட்பாடு


திருவள்ளுவர்

தமிழரின் பெருமையை உலகுக்கு உணர்த்திய அறநூல் திருக்குறள். இந்நூல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிய தமிழரின் பண்பாட்டைப் பறைசாற்றுகிறது. இந்நூலில் இடம்பெற்றுள்ள அறக்கருத்துகள் நடைமுறை வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய நெறிகளை எடுத்துரைக்கின்றன.

திருவள்ளுவர், வாழ்வியல் நெறியை அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பகுதிகளாகப் பிரித்துள்ளார். திருக்குறளின் தத்துவமே அறவழியில் வாழ்ந்து, அறவழியில் பொருள் சேர்த்து, இன்பமாக அறவழியில் வாழ்வதேயாகும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

'எல்லாப் பொருளும் இதன்பால் உள' என்பதற்கேற்ப திருக்குறளில் அறக்கருத்துகள் நிறைந்துள்ளன. அவை, உலக மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளபடுவதால் இந்நூலைப் பிற மொழிகளிலும் மொழிபெயர்த்துள்ளனர்.

| மொழிபெயர்ப்பு | மொழிபெயர்ப்பாளர்கள் |
|---|---|
| ஆங்கிலம் | ஜி.யு.போப் |
| இலத்தீன் | வீரமாமுனிவர் |
| ஜெர்மன் | டாக்டர் கிரௌல் |
| பிரெஞ்சு | ஏரியல் |

திருக்குறள் நீதிநூல் மட்டுமன்று; அஃது ஒரு வாழ்வியல் நூலாகும்; இயற்றப்பட்ட காலத்தில் வாழ்ந்த மக்களுக்கு மட்டுமின்றி இந்நூற்றாண்டின் புதிய தலைமுறையினருக்கும் வழிகாட்டும் அறநூலாக விளங்குகிறது. வள்ளுவத்தின் பொருண்மை, காலந்தோறும் புதிய கருத்தாக்கங்களைத் தந்து இனம், மொழி, நாடு என்ற எல்லைகளைக் கடந்து மனித வாழ்க்கையை வளப்படுத்துகிறது. இவ்வாறு, பல சிறப்பியல்புகள் கொண்ட அறக்கோட்பாடுகளை உலகிற்குத் திருக்குறள் வழங்கியுள்ளது.

### ஆன்மிகம்

ஆன்மிகம் என்பது பொதுவாகப் **'புலன்கடந்த அனுபவநிலையாகும்'**. மனிதன், தன்னுள் இருக்கும் ஆத்ம ஞானத்தை உணர்வதுதான் ஆன்மிகமாகும். **ஞானயோகம், கர்மயோகம் மற்றும் பக்தியோகம்** என்பன ஒவ்வோர் உயிரும் அதன் கர்ம வினைகளின்படி, அதன் தற்போதைய நிலையின்படி, ஏற்ற வழியைப் பின்பற்றித் தமது குறிக்கோளான வீடுபேறு அல்லது ஆன்மாவின் உண்மை நிலையை அறிவதே ஆன்மிகம் எனலாம்.

சமயக் கோட்பாடுகளின்படி, உயிரினங்கள் அனைத்தும் தெய்வீகத் தன்மை கொண்டவை எனலாம். தெய்வீகத்தின் அங்கமாகத்தான் இவ்வுலகம் அமைந்துள்ளது. அந்தத் தெய்வீகத் தன்மையை உணர்த்துவதுதான் ஆன்மிகமாகும். மனிதன் இவ்வுலகில்



XII Ethics_Lesson 10.indd 240 12-12-2021 21:54:40

இயற்கையோடு இணைந்து வாழ்வதே ஆன்மிகம். இதுவே இந்தியப் பண்பாட்டின் ஆணிவேராகும்.

## யோகா

சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் பாரத நாட்டில் தோன்றிய பழைமையான 'வாழ்வியல் பயிற்று முறை' யோகாவாகும். உடல், மனம், அறிவு, உணர்வு ஆன்மிகம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் சமன்பாட்டிற்கும் உதவிடும் கலை யோகக்கலையாகும். இஃது உடலையும் உள்ளத்தையும் நலத்துடன் வைத்துப் போற்றும் ஒழுக்கங்களைப் பற்றிய நெறியாகும். 'யோகா' என்பது, ஒரு சமயம் அன்று; அஃது ஒரு பெருந்தத்துவம்; ஒரு கலை; ஓர் அறிவியல் மற்றும் வாழ்க்கை நெறிமுறையாகும். (Yoga in short, is not a religion but a great philosophy, an art, a science and a way of life)

யோகநிலையில்தான் மற்ற உயிர்களையும் தன்னுயிர் போலவே நேசிக்க முடியும். இதனையே **இராமலிங்க அடிகளார் ஜீவகாருண்ய ஒழுக்கம்** என்றார். கிறித்துவ புனித நூலான பைபிள் **"உன்னைப் போல பிறரையும் நேசி"** என்று குறிப்பிடுகின்றது. இஸ்லாமிய புனித நூலான திருக்குரான் **"நீ பிறரிடம் இரக்கம் காட்டினால் நான் உன்னிடம் இருமடங்கு இரக்கமுடையவனாய் இருப்பேன்"** என்கிறது. இந்த ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை, யோகமுறையை மேற்கொள்வதால் அடையமுடிகிறது.

## பஞ்சசீலக் கொள்கை

சமஸ்கிருத மொழியில் **'பஞ்ச'** என்றால் 'ஐந்து', **'சீலம்'** என்றால் ஒழுக்கம்(நற்பண்புகள்). எனவே, **பஞ்சசீலம்** என்றால் **ஐந்து நற்பண்புகள்** எனப்படுகிறது. இஃது இந்திய வெளியுறவுக் கொள்கையின் ஓர் அங்கமாகத் திகழ்கிறது. பஞ்சசீலக் கொள்கையை உலகிற்கு அளித்தவர் **ஜவஹர்லால் நேரு** ஆவார். பஞ்சசீலக் கோட்பாடு, இந்தியப்பண்பாட்டு உணர்வை அடித்தளமாகக் கொண்டே உருவாக்கப்பட்டது.

1. ஒரு நாடு மற்ற நாட்டின் ஒற்றுமையையும் இறையாண்மையையும் மதிக்க வேண்டும்.
2. ஒருநாடு, பிறநாட்டின் எல்லைகளை அத்துமீறக் கூடாது.
3. ஒருநாடு, பிறநாட்டு உள்விவகாரங்களில் தலையிடக் கூடாது.
4. சமத்துவ மற்றும் சகோதரத்துவ நலனுக்காகப் பாடுபடவேண்டும்.
5. சமாதான சகவாழ்வு

### பாண்டுங் மாநாடு – அணிசேரா இயக்கம்

இரண்டாம் உலகப்போர் முடிவில் அமெரிக்காதலைமையில் முதலாளித்துவ நாடுகள் ஓரணியாகவும், சோவியத்ரஷ்யா தலைமையில் பொதுவுடமைக் கொள்கையைக் கொண்ட நாடுகள் மற்றொரு அணியாகவும் செயல்பட்டன. இவைகளுக்குள்,ஆயுதங்களை பெருக்கும் போட்டியும் மறைமுகமாக நடைபெற்றது. இந்நிலையில் இந்த இரு அணியிலும் இல்லாத நாடுகளை ஜவஹர்லால் நேரு தனது வெளியுறவுக்கொள்கையின் அடிப்படையில் ஒரு புதிய அணியை உருவாக்கினார்.

இந்நாடுகளின் மாநாடு இந்தோனேசியாவில் 1955–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18முதல் 24 ஆம் தேதி வரை பாண்டுங் நகரில் ஆசிய – ஆப்பிரிக்க நாடுகளின் மாநாடு கூட்டப்பட்டது. இம்மாநாட்டில் 29 நாடுகள் கலந்து கொண்டன. இந்தியாவின் சார்பாக ஜவஹர்லால் நேரு, சீனாவின் சூ–யென்–லாய், இந்தோனேசியாவின் சுகர்னோ, யுக்கோஸ்லோவியாவின் மார்ஷல் டிட்டோ, எகிப்தின் கர்னல் நாசர் ஆகியோரும் கலந்து கொண்டனர் .


## இந்திய வானவியல்

குப்தர்கள் காலத்தில் கணிதம், வானவியல், மருத்துவம், ஜோதிடம் போன்ற துறைகளில் இந்தியா வளர்ச்சி பெற்றிருந்தது. இவர்கள் காலத்தில் வாழ்ந்த **'ஆரியபட்டர்'** வானவியல் மற்றும் கணிதத்தில் சிறந்து விளங்கினார். **"ஆரிய சித்தாந்தம்"** என்ற தமது வானவியல்



XII Ethics_Lesson 10.indd 241 12-12-2021 21:54:40

நூலில், 'உலகம் உருண்டையானது, பூமி தனது அச்சில் சுழலுவதால் இரவு, பகல் ஏற்படுகிறது' என்றார். இவர் சூரிய, சந்திர கிரகணங்கள் தோன்ற உண்மையான காரணங்களை விளக்கிக் கூறியுள்ளார். ஆனால், மேலைநாட்டு வானவியல் அறிஞர்கள் பிற்காலத்தில்தான் இவ்வுண்மைகளை அறிந்தனர். ஆரியபட்டர் எழுதிய **'ஆரியபட்டீயம்'** என்ற நூல் உலகமே வியக்கும் வானவியல் நூலாகப் போற்றப்படுகிறது.



ஆரியபட்டர்

## வராகமிகிரர்

இவர் **'பஞ்ச சித்தாந்திகா, 'பிருகத் சம்ஹிதா'** முதலான ஜோதிட, வானவியல் நூல்களையும் எழுதியுள்ளார். மேலும், **'லகு ஜாதகம்', 'பிரிக ஜாதகம்'** போன்ற ஜோதிட, வானவியல் நூல்களையும் எழுதியுள்ளார். இவர் தம் நூல்களில் கோள்கள் யாவும் மனித வாழ்வோடு எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளன என்பதை விளக்கிக் கூறியுள்ளார்.

## பிரம்மகுப்தர்

வானவியலிலும் கணிதவியலிலும் வல்லுநரான பிரம்மகுப்தர், **பிரம்மஸ்பு சித்தாந்தம்**, **காரணகண்டாக்கடியகா** முதலிய நூல்களை எழுதியுள்ளார். பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே புவி ஈர்ப்பு விசை பற்றித் தமது நூல்களில் குறிப்பிட்டுள்ளார்.

## பாஸ்கரர்



பாஸ்கரர்

வானவியலிலும் கணிதத்திலும் சிறந்த விளங்கிய அறிஞர் பாஸ்கரர். இவர், **காரண குதூகலா** என்ற நூலையும் **தட்கலிகத்தி** என்ற நூலையும் எழுதியுள்ளார். இந்நூல்கள் கிரகங்களின் இயக்கங்களைப் பற்றிக் கூறுகின்றன. இதன்மூலம் அக்காலத்திலேயே வானவியலில் இந்தியா சிறந்து விளங்கியிருந்தது என்பதை அறியமுடிகிறது.

### இந்தியச் செயற்கைக் கோள்கள்

இஸ்ரோ நிறுவனம் (ISRO), இந்தியாவின் சார்பில் ஆரியபட்டா, பாஸ்கரா, ரோகிணி, ஆப்பிள் போன்ற செயற்கைக் கோள்களையும் IRS -1A,1B ஆகிய தொலையுணர்வு செயற்கைக் கோள்களையும் பாதுகாப்பு அடிப்படையிலான செயற்கை கோள்களையும் விண்ணில் செலுத்தியுள்ளது. இந்தச் செயற்கைகோள்களுக்கு இந்தியாவின் வானவியல், கணித வல்லுநர்களான ஆரியபட்டர் பெயரும் பாஸ்கரர் பெயரும் சூட்டியது குறிப்பிடத்தக்கது.

## இந்திய மருத்துவம்

இந்திய மருத்துவம், சிந்துவெளி நாகரிகம் காலந்தொட்டு வளர்ந்திருக்க வேண்டும். ஆனால், போதிய தகவல்களும் ஆதாரங்களும் இல்லாமையால், ஆயுர்வேதம் தோன்றுவதற்குமுன், பழங்குடியினர்களின் மருத்துவம் இருந்திருக்கலாம். கி.மு.(பொ.ஆ.மு) எட்டாம் நூற்றாண்டுவரை, வேதகால மருத்துவம் நடைமுறையில் இருந்தது. அதன்பின் ஆயுர்வேத மருத்துவம் வளர்ச்சி பெற்றிருக்கவேண்டும். கி.மு.(பொ.ஆ.) ஆறாம் நூற்றாண்டுக்கு முன்பே காம்பில்யா, வாரணாசி, தட்சசீலம் ஆகிய இடங்களில் மருத்துவக் கல்வி நிறுவனங்கள் இயங்கி வந்துள்ளன.

இந்தியர்கள் அறுவைசிகிச்சை முறையில் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தனர். வயிற்றுப் புறத்தோலில் செய்யப்படும் அறுவைசிகிச்சை(Lab Parotomy), சிறுநீரகக் கற்களை அகற்றும் அறுவைசிகிச்சை(Lithicotomy), ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை (Plastic Surgery) ஆகியவற்றில் இந்திய மருத்துவர்களின் பணிகள் பாராட்டுக்குரியவையாகும்.

இந்தியா முழுவதும் இப்போது ஆயுர்வேத – யூனானி மருத்துவர்கள்



XII Ethics_Lesson 10.indd 242 12-12-2021 21:54:40

பயன்படுத்தி வரும் சிலாசித்துவேர் மொகஞ்சதாரோவில் கிடைத்துள்ளது. இவ்வேர் வயிறு, குடல், நுரையீரல் போன்றவற்றில் உருவாகும் நோய்களையும் குணமாக்கும் தன்மை உடையது.

### இந்திய மருத்துவ வளர்ச்சி

மௌரியர் ஆட்சிக் காலத்தில் மருத்துவப் பராமரிப்புக்கும், சுகாதாரத்திற்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டது. முதியோர், ஆதரவற்றோர், மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்காக சிறப்பு மருத்துவமனைகள் இயங்கிவந்தன. கால்நடைகளுக்கெனத் தனியாக மருத்துவமனைகளும் இருந்தன.

வாக்பட்டரின் **அஷ்டாங்கசங்கிரகம், அஷ்டாங்கஹிருதயா** என்னும் இரு மருத்துவ நூல்கள் புகழ்பெற்றவையாகும். '**அஷ்டாங்கஹிருதயா**' என்ற மருத்துவநூல், நோய் தீர்க்கும்முறை, சுகாதாரம், உடலுறுப்பு அமைப்பியல் அறுவைசிகிச்சை, தாய்மை மருத்துவம், கண் மருத்துவம் பற்றிக் குறிப்பிடுகின்றது. சரகர் எழுதிய '**சரகசம்ஹிதா**' என்னும் நூல் உடல், உள மருத்துவத்தையும், சுசுருதர் எழுதிய '**சுசுருதசம்ஹிதா**' அறுவைசிகிச்சை முறையைப்பற்றிக் கூறுகின்றன.

### ஆயுர்வேத மருத்துவம்



ஆத்ரேயர்

கி.மு.(பொ.ஆ.மு) எட்டாம் நூற்றாண்டில் '**ஆத்ரேயர்**' என்ற மருத்துவர் வாழ்ந்தார். அவர், தமது சீடர்களுக்குத் தொகுத்தளித்த ஆய்வேடுகளும், அக்னி வேசர் எழுதிய '**அக்னி வேச தந்தரா**" என்ற நூலும் ஆயுர்வேதம் பற்றிக் கூறுகின்றன. ஆத்ரேயர் ஆயுர்வேத மருத்துவத்தைப் பற்றி வரிசையாக தம் ஆய்வேடுகளில் குறிப்பிட்டுள்ளார்.

### சித்த மருத்துவம்

உயரிய பண்பாடும், அறிவுத்திறனும், சிறந்த ஆற்றலுடனும் விளங்கிய சித்தர்களால் உருவாக்கப்பட்டது சித்தமருத்துவமாகும். இவர்கள் எல்லாவகை நோய்தீர்க்கும் மருந்துகளையும், தாதுக்களையும் வேதியியல் பொருள்களையும் ஆராய்ந்து பயனுள்ளவை எவை, பயனற்றவை எவை என்று கண்டறிந்துள்ளனர். பாதரசத்தை அடிப்படையாகக்கொண்டு, நீண்ட ஆயுள்பெற **இரசவாத முறையில்** மருந்து தயாரிக்கும் முறையை அறிந்து வைத்திருந்தனர். இது தமிழ்நாட்டுக்கு உரித்தான மருத்துவ முறையாகும்.

**திருமூலர், இடைக்காடர், போகர், அகத்தியர், பதஞ்சலி, தன்வந்திரி, மச்சமுனி முதலானோர் பதினெண் சித்தர்களுள்** குறிப்பிடத்தக்கவர்கள்.

**பண்டைய கால மருத்துவமனைகள்**

- ஆந்திரா – விஜயபுரி, நாகார்ஜுனா கொண்டா
- தமிழ்நாடு – தஞ்சாவூர், திருமுக்கூடல், திரிபுரந்தகம், திருப்புகலூர், திருவரங்கம்
- கர்நாடகா – கௌடியமடம்
- பீகார் – ஷிபாக்கனா மருத்துவமனை
- கேரளா – ஆலப்பூர், புலிமந்தாள், வயங்கரை, வெள்ளோடு, சோட்டானிக்கரை, குருவாயூர்

### இந்தியக் கணிதம்



பிரம்மகுப்தர்

குப்தர்கள் காலத்தில் வாழ்ந்த ஆரியபட்டர், ஆரியபட்டீயத்தில் வட்டத்தின் பரப்பைக் கண்டுபிடிக்க உதவும் $\pi$ உண்மையான மதிப்பை 3.1416 எனத் துல்லியமாகக் கூறியுள்ளார். இலட்சம்,



XII Ethics_Lesson 10.indd 243 12-12-2021 21:54:41

கோடி போன்ற மிகப்பெரிய எண்களைச் சுருக்கமாகக் குறிப்பிடும் வகையை ஆரியபட்டர் பயன்படுத்தினார். இயற்கணிதம் (Algebra) பயன்படுத்திய முதல் இந்தியர் இவரேயாவார்.

பிரம்மகுப்தர் ஆற்றிய மிகப்பெரிய பணி பூஜ்யத்தின் பயனை எடுத்துக்காட்டியதாகும். இவர் குப்தர் காலத்தில் வாழ்ந்த சிறந்த கணித மேதையாவார். இவர் எழுதிய நூல், **சித்தாந்த சிரோன்மணியாகும்.** இதில் எண்ணியல், எடை, கொள்ளளவு, கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல், பரப்பு, கனஅளவு பற்றியும் பூஜ்யம், இயற்கணிதம் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

## நுண்கலைகள்

### இசை

இசை, மனித மனத்திற்கு அமைதி தருவதாகும். இசையானது காலத்திற்கேற்றாற்போலப் பரிமாணத்தைப் பெற்று வருகிறது. இயற்கையினின்றே முதல் இசை தோன்றியது எனலாம். இதனை ஓசை என்றழைப்பர். அதன்பின்னர், இசை புதிய வளர்ச்சியைப் பெற்றது. இந்திய இசையின் சாரமாகத் திகழ்வது சாமவேதமாகும். பிற்காலத்தில் சாம வேதத்தைத் தழுவி, வட இந்தியாவில் தோன்றிய இசைப்பாணி **இந்துஸ்தானி இசை** (Hindustani Music) எனப்பட்டது. அதே காலக்கட்டத்தில், தென்னிந்தியாவில் **கர்நாடக இசை**(karnatic Music) புகழ் பெறத் தொடங்கியது. மௌரியர்கள், குப்தர்கள் போன்ற வட இந்திய வம்சாவழி மன்னர்களும் தமிழகத்தில் சங்ககாலம்முதல் பிற்காலப் பாண்டியர்கள் வரையிலான மன்னர்களும், இசைக்கலையையும் இசைக்கலைஞர்களையும் ஆதரித்துள்ளனர். கி.பி.(பொ.ஆ.) பத்தாம் நூற்றறாண்டின் இறுதியில், இஸ்லாமியர்களின் இசை இந்தியாவில் மெல்ல மெல்ல பரவத் தொடங்கியது. இஸ்லாமியத் துறவிகளான சூபிக்கள் **குவாலிஸ்** (Qualis Music) என்ற இசைமுறையை உருவாக்கிப் பரப்பினர். ஐரோப்பியரின் வருகைக்குப் பின்னர், **மேற்கத்தியஇசை** (Western Music) இந்தியாவில் புகுத்தப்பட்டது. தமிழிசை, கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை ஆகியவை இந்தியா உலகிற்கு அளித்த கொடைகளாகும்.

> **உங்களுக்குத் தெரியுமா?**
>
> **தமிழிசை மூவர்**
>
> முத்துத்தாண்டவர், அருணாச்சலக் கவிராயர், மாரிமுத்தாப்பிள்ளை ஆகிய மூவரும் தமிழிசை மூவர் எனப்படுகின்றனர். கிருதி எனப்படும் கீர்த்தனைகளை மையப்படுத்தித் தமிழ்ப் பாடல்களைப் சரணம், பல்லவி, அனுபல்லவி ஆகிய இசையம்சங்களுடன் இயற்றினர். இவர்களின் தமிழ்ப்பணியைப் பாராட்டித் தமிழக அரசு, சீர்காழியில் மணிமண்டபத்தை அமைத்துள்ளது.

### பஞ்சமுக வாத்தியம்



பஞ்சமுக வாத்தியம்

பழங்காலத் தொன்மையான இசைக்கருவிகளுள் பஞ்சமுக வாத்தியமும் ஒன்று. இது வெண்கல வார்ப்பால் உருவாக்கப்பட்ட உயரமான குடமாகும். இதில் மூடப்பட்ட ஐந்து வாய்கள் இருக்கும். ஒவ்வொரு வாயில் இருந்தும் தனித்துவமான இசை வெளிவரும். இதுவே, பஞ்சமுகவாத்தியமாகும். இவ்வாத்தியம் திருவாரூர் தியாகராஜர் கோயிலிலும், திருத்துறைப்பூண்டி பிறவிமருந்தீஸ்வரர் கோயிலிலும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## செவ்வியல் நடனங்கள்

### பரதநாட்டியம்

தமிழ்நாட்டுக்குரிய சிறந்த நடனங்களில் முக்கியமானது பரதநாட்டியம். இது, புராணவியல் அடிப்படையில் **பரத முனிவரால்** உருவாக்கப்பட்டதால் **'பரதம்'** எனப் பெயர் பெற்றது. மிகத்தொன்மை வாய்ந்த இந்நடனம், இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் புகழ் பெற்று விளங்குகிறது.



XII Ethics_Lesson 10.indd 244 12-12-2021 21:54:41



பரதநாட்டியம்

உங்களுக்குத் தெரியுமா?

**கருநாடக இசையின் மூவர்**

*தியாகராஜர், சியாமா சாஸ்திரிகள், முத்துசுவாமி தீட்சிதர் ஆகியோர் கர்நாடக இசையின் மும்மூர்த்திகளாவர். இவர்களுடைய பாடல்கள், பரதநாட்டியத்திலும் ஆன்மிக இசை நிகழ்வுகளிலும் முக்கியத்துவம் பெறுகின்றன. திருவாரூரில் இவர்களுக்கு நினைவிடம் அமைக்கப்பட்டுள்ளது.*

பரதம் என்ற சொல் **ப – பாவம், ர – ராகம், த – தாளம்** என்ற மூன்றையும் குறித்து நிற்பதாகச் சொல்லப்படுகிறது. **பாவம் உணர்ச்சியையும், ராகம் இசையையும் குறிக்கும்** இவற்றுடன் **தாளம்** சேர்ந்த நடனமே **பரதநாட்டியமாகும்.** வரலாற்று நோக்கில் இந்தியாவின் செவ்வியல் ஆடல் வகையில் ஒன்று பரத நாட்டியமாகும். இந்த நடனத்தை ஆடுபவர்கள் பெரும்பாலும் பெண்களே என்றாலும், ஆண்களும் இதனை ஆடுவதுண்டு. சிவபெருமான் ஆடும் நடனம் '**தாண்டவம்**' என்று சொல்லப்படுகிறது. மகிழ்ச்சியின் உச்சியில் அவர் ஆடும் நடனம் **ஆனந்த தாண்டவமென்றும்**, அழிக்கும் கடவுளாக அவர் ஆடும் நடனம் '**ருத்ரதாண்டவம்**' என்றும் அழைக்கப்படுகிறது. மேலும், பெண்கள் மென்மையான அசைவுகளுடன் ஆடும் நடனம் '**லாஸ்யம்**' என்றும் அழைக்கப்படுகிறது.

## கதகளி

'**கதகளி**' கேரள மாநிலத்தின் பாரம்பரிய நடனமாகும். இந்நடனம், கேரள மக்களின் பண்பாட்டினை எடுத்துக்காட்டும் தெய்வீக நடனக்கலையாகும். கதகளி என்றால் 'கதையை அடித்தளமாகக் கொண்ட ஆடுதல்' என்று பொருள். '**ஆட்டக்கதை**' என்ற மற்றொரு பெயரும் இதற்குண்டு. இராமாயணம், மகாபாரதம் போன்ற காவியங்களில் சொல்லப்பட்ட சமயம் சார்ந்த நிகழ்வுகள், இந்த நடனத்திற்குக் கருப்பொருளாக அமைகின்றன.

## மோகினி ஆட்டம்



மோகினி ஆட்டம்

**மோகினி ஆட்டம்** கேரளாவின் பாரம்பரிய நடனங்களில் ஒன்று. மோகினி என்ற சொல், ஓர் அழகான பெண்ணென்றும் ஆட்டம் என்றால் நடனம் என்றும், பொருள்படும். பாற்கடலிலிருந்து தோன்றிய அமிர்தத்தைக் கொடுக்கும் திருமாலின் அவதாரம் மோகினியாக மையப்படுத்தப்டுவதால் மோகினியாட்டம் என்று பெயர் பெற்றது.

## குச்சிப்புடி

**குச்சிப்புடி** ஆந்திரப்பிரதேச மாநிலத்தில் உருவான நடனமாகும். இப்பெயர், ஆந்திர மாநிலத்தின் கிருஷ்ணா மாவட்டத்திலுள்ள

குச்சிலாபுரம் என்ற கிராமத்துடன் தொடர்புடையது. 17–ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தொடங்கிய இக்கலை, இன்று இந்தியாவிலும் உலகளவிலும் ஆடப்பட்டு வருகிறது.

## யக்ஷகானம் (யசக்கானம்)



யக்ஷகானம்

கர்நாடகாவின் மாநில நடனமாகக் கருதப்படுவது யக்ஷகானமாகும். கி.பி. (பொ.ஆ.) 16–ஆம் நூற்றாண்டுமுதல் இந்நடனம் மக்களால் விரும்பி பார்க்கப்படுகிறது. கர்நாடக மாநிலத்தில், பெல்லாரி மாவட்டத்தில் குருங்கோடு என்றோர் இடமுள்ளது. அங்குள்ள சோமசுந்தரர் ஆலயத்தில், இந்நாட்டிய நாடகம் அரங்கேற்றப்பட்டதாக வரலாற்றுத்தகவல்கள் தெரிவிக்கின்றன. இசை, உரையாடலோடு கூடிய இந்நடனத்தின் மூலம் இராமாயணம், மகாபாரதத்தின் முக்கிய காட்சிகள், சமணக் கதைகள், மக்களின் ஆன்மிக நம்பிக்கைகள் போன்றவை விளக்கப்படுகின்றன.

## ஒடிசி

ஒடிஸா மாநிலத்தின் பாரம்பரிய நடனம் ஒடிசி. இது கோயில்களில் நடைபெற்று வந்த ஒரு பாரம்பரிய நடனக்கலையாகும். 17–ஆம் நூற்றாண்டில் **கோட்டிப்புகழ்** எனப்படும் சிறுவர்கள் இந்நடனத்தை பெண்ணுடை தரித்து கோயில்களில் ஆடினர்.

## கர்பா, தாண்டியா



ராஜபுதனம் ஓவியம்

குஜராத் மாநிலத்தின் பாரம்பரிய நடனங்கள் **கர்பா மற்றும் தாண்டியாவாகும்.** இவை நவராத்திரி விழாவின்போது, கலாச்சார உடையணிந்து ஆடி மகிழும் நடனங்களாகும். இந்தியா மட்டுமன்றி, வெளிநாடுகளிலிருந்தும் நவராத்திரி திருவிழா நடனங்களைக் காண, பலரும் நம் பாரத திருநாட்டிற்கு வருகை புரிகின்றனர்.

இது போன்று பீகாரின் **பிதஸிய நடனம்**, மேற்கு வங்காளத்தின் **காத், ஜாத் நடனங்கள்**, மகாராஷ்டிரத்தின் **தமாஸா, லாவனி** போன்ற நடனங்களும் உலகிற்கு இந்தியாவின் பண்பாட்டை எடுத்தியம்புகின்றன.

## ஓவியக்கலை

இந்தியாவில் ஓவியக்கலை இயற்கையை மையமாக வைத்து தோற்றுவிக்கப்பட்டது. பழங்கால மனிதர்கள் இயற்கையின் அம்சங்களான மேகம், மழை, மரங்கள், விலங்குகள், மனித உருவங்கள் போன்றவற்றைக் குகைகளிலும், இறந்த விலங்குகளின் தோல்களிலும் வரைந்தனர். கரித்துண்டுகளைத் தொடக்கக் காலத்தில் ஓவியம் வரைய பயன்படுத்தினர். பிற்காலத்தில் மன்னர்கள் ஆட்சி நடைபெற்றபோது, ஓவியங்கள் பரிணாம வளர்ச்சி பெற்றன. இவர்களின் காலத்தில் கோயில்களின் சுவர்களில் ஓவியங்கள் தீட்டப்பட்டன. வண்ணத் தூரிகைகளுக்கு முக்கியத்துவம் தரப்பட்டது.



XII Ethics_Lesson 10.indd 246 12-12-2021 21:54:42

பல்லவ மன்னனான முதலாம் மகேந்திரவர்மன் ஓவியக்கலைக்குப் பேராதரவு தந்தார். **தட்சணசித்திரம்** என்ற ஓவிய நூலுக்கு உரை எழுதினார். இவர், இக்கலையில் வல்லவராதலால் **'சித்திரகாரப்புலி'** என்ற விருதினைப் பெற்றார்.

காலத்திற்கேற்றார்போல் நமது நாட்டில் பல்வேறு ஓவிய பாணிகள் தோன்றி வளர்ந்தன. அவையாவன,

1. மதுபானி ஓவியங்கள்
2. இராஜபுதன ஓவியப்பாணி
3. தஞ்சாவூர் ஓவியப்பாணி
4. முகலாய ஓவியப்பாணி
5. பசோஹ்லி ஓவியப்பாணிஎன்பவாகும்.

### மதுபானி ஓவியப் பாணி

பீகார் – நேபாள எல்லையில் உள்ள மதுபானி என்ற மாவட்டத்தில் இவ்வோவியக்கலை தோன்றியதால் மதுபானி ஓவியங்கள் எனப் பெயர் பெற்றது. நன்கு மெழுகப்பட்ட மண்சுவர்களில் இவ்வகை ஓவியங்கள் அதிகமாக வரையப்பட்டன. தாவர இலைகளிலிருந்து பெறப்படும் ஒருவகைச்சாறு நிறம்தரும் மூலப்பொருளாகப் பயன்படுத்தப்பட்டது. இராமாயணத்தின் முக்கியக் காட்சிகள் இவ்வகை ஓவியங்களில் முக்கியத்துவம் பெற்றன.

### இராஜபுதன ஓவியங்கள்

கி.பி. (பொ.ஆ.) 18–ஆம் நூற்றாண்டில் இராஜஸ்தான், மத்திய பிரதேசப்பகுதிகளில் தோன்றி வளர்ச்சி பெற்ற ஓவியங்களே இராஜபுதன ஓவியங்களாகும். இந்த ஓவியங்கள் சிற்றோவியங்கள் (Minature) என்றழைக்கப்பபட்டன. இவை பெரும்பாலும் அரண்மனை மற்றும் கோட்டை சுவர்களில் வரையப்பட்டன. இவ்வோவியம் வரைவதற்கான நிறங்கள் தாவரங்களின் சாறு, சிப்பி போன்றவற்றிலிருந்து பெறப்பட்டன. சிறிய வகை வண்ணத்தூரிகைகள் இவ்வோவியம் வரைய பயன்படுத்தப்பட்டன. அரசன், அரசவை நிகழ்வுகள், மக்களின் தொழில், அரசனின் போர் முறைகள் போன்றவை இவ்வோவிய உருவாக்கத்தின் கருப்பொருளாக அமைந்தன.

### தஞ்சாவூர் ஓவியப் பாணி

கி.பி. (பொ.ஆ.) 17–ஆம் நூற்றாண்டில் தஞ்சை நாயக்க மன்னர்கள் காலத்தில் வளர்ந்த இவ்வகை ஓவியங்கள், கி.பி பதினெட்டாம் நூற்றாண்டில் மராட்டியர்கள் காலத்தில் புகழ்பெற்றன. தஞ்சை மராட்டிய மன்னரான சரபோஜி காலத்தில் ஆந்திராவிலிருந்து தஞ்சைக்குக் குடியேறிய 'மூச்சி' (Moochy) என்ற பெயர் கொண்ட ஓவியக்கலைஞர்கள் பரம்பரைத் தொழிலாகவே இவ்வோவியத்தை வரைந்தனர். இவ்வோவியர்கள் புராணங்களில் கூறப்படும் கடவுளரின் உருவங்களை ஓவியமாகத் தீட்டினர். இவ்வகை ஓவியங்களின் பின்புல வண்ணம் கரும்பச்சை, அடர்நீலம், ஒளிர் சிவப்பு ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

### முகலாய ஓவியப் பாணி

கி.பி. (பொ.ஆ.) 16–ஆம் நூற்றாண்டில் முகலாயர்கள் ஆட்சிக் காலத்தில் தோன்றி வளர்ந்த ஓவியங்கள் இவ்வகை ஓவியங்களாகும். முகலாய மன்னரான ஹுமாயூன் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் பாரசீக பாணியிலான ஓவியங்கள் வளர்ச்சி பெறத் தொடங்கின. முகலாயர் கால ஓவியர்கள் பாரசீக பாணியில் ஓவியங்களை வரையத் தொடங்கி இந்திய ஓவியப் பாணியையும் அதனோடு இணைத்தனர். எனவே பாரசீக, இந்திய ஓவியப் பாணிகளின் இணைப்பாக முகலாய ஓவியப் பாணி அமைந்தது. முகலாய மன்னரான ஜஹாங்கீர் ஓவியக்கலைக்கு முக்கியத்துவம் தந்ததுடன் சிறந்த ஓவியராகவும் விளங்கினார். இவ்வோவியங்களில் அரசர், அரசியர், அரண்மனைக் கொண்டாட்டங்கள், அரசவை நிகழ்வுகள், இயற்கை காட்சிகள், இளவரசர் மற்றும் இளவரசியர் ஆகியோரின் வீரச்செயல்கள் போன்றவை முக்கியத்துவம் பெற்றன.

### பசோஹ்லி ஓவியப்பாணி

கி.பி. (பொ.ஆ.) 17–ஆம் நூற்றாண்டில் காஷ்மீரில் ராவி நதிக்கரையில் அமைந்துள்ள பசோஹ்லி என்ற இடத்தில் தோன்றி வளர்ந்த



XII Ethics_Lesson 10.indd 247 12-12-2021 21:54:42

ஓவியக்கலையாகும். இவ்வகை ஓவியங்களில் புராணங்களில் குறிப்பிடப்பட்ட கடவுளர்களின் உருவம் முக்கியத்துவம் பெற்றது.

இவ்வாறு, இந்திய வரலாற்றில் ஓவியங்கள், இயற்கையையும், கடவுளையும், அரசர்களையும், அரசவை நிகழ்ச்சிகளையும் உலகிற்கு உணர்த்துகின்றன.

**உங்களுக்குத் தெரியுமா?** அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல் போன்ற இடங்களில் வரையப்பட்ட ஓவியங்கள் இந்திய ஓவியத்தின் சிறப்புகளை வெளிப்படுத்துகின்றன. இலங்கை நாட்டில் சிகிரியா என்ற இடத்திலுள்ள ஓவியங்களில் இந்திய ஓவியங்களின் சாயல்கள் காணப்படுகின்றன.

## சிற்பக்கலை

சிற்பம் எனப்படுவது, ஒரு முப்பரிமாணக் கலைப் பொருளாகும். இது கடினமான அல்லது நெகிழ்வுத் தன்மையுள்ள பொருள்களுக்கு உருவம் கொடுப்பதன் மூலம் உருவாக்கப்படுகிறது. சிற்பங்களை உருவாக்குபவர் சிற்பியென அழைக்கப்படுகிறார்.

சிற்பக்கலையின் வாயிலாக இந்தியாவின் தொன்மை வரலாற்றையும் மக்களின் பண்பாட்டையும் அறிந்து கொள்ள முடிகிறது. சிற்பக்கலையைப்பற்றி அறிந்து கொள்வதற்குத் தொல்பொருள்சின்னங்கள், நாணயங்கள், கல்வெட்டுகள், இலக்கியங்கள் முதலியன சான்றுகளாக உள்ளன.

திருநெல்வேலி மாவட்டம், ஆதிச்சநல்லூரில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியில் தாய்க்கடவுளின், செப்புத் திருமேனிகள் கண்டெடுக்கப்பட்டன. இவை அனைத்தும் பழந்தமிழகத்தில் உலோகத் திருமேனிகள் இருந்தன என்பதை எடுத்தியம்புகின்றன. மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட வெண்கலத்தினால் செய்யப்பட்ட நடனமாதுவின் உருவச்சிற்பம், நமக்குச் சிந்துவெளி மக்களின் சிற்பக்கலையைப் பறைசாற்றுகிறது. இந்தியாவில் பௌத்த சிற்பக்கலை, கி.மு. (பொ.ஆ.மு) மூன்றாம் நூற்றாண்டில் மௌரியர் ஆட்சியில் தொடங்கி கி.பி. (பொ.ஆ.) 12–ஆம் நூற்றாண்டில் பீகார், வங்காளத்தை ஆண்ட பாலர், சேனர் ஆட்சிவரை தொடர்ந்து வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இதைத் தவிர பௌத்த சமய கலைக்கூறுகள் ஜாவா, தாய்லாந்து, இலங்கை, சீனா, ஜப்பான், கொரியா, பர்மா, திபெத், நேபாளம் போன்ற ஆசிய நாடுகளிலும் பரவியுள்ளன.

### பௌத்தச் சமயத்தோடு தொடர்புடைய நாடுகளும் கட்டடங்களும்

| | | |
|---|---|---|
| ஜாவா | – | போரோபுதூரில் உள்ள ஸ்தூபி |
| இலங்கை | – | அனுராதபுரம், பொலனருவா |
| சீனா | – | உலகிலேயே மிகப்பெரிய செப்புத் திருமேனி |
| கொரியா | – | பாப்ச்சுசா |
| பர்மா | – | பகானின் ஆனந்த கோயில் |
| நேபாளம் | – | பாதனில் உள்ள தங்க விகாரம் |

குஷாணர் காலத்தில், லிங்கவழிபாட்டின் தொடர்ச்சியாக லிங்கத்தை ஒருமுகத்துடனும், நான்கு முகத்துடனும் படைத்து வழிபடும் மரபினைக் கொண்டிருந்தனர்.

இந்திய வரலாற்றில் சிற்பக்கலையின் வியத்தகு வளர்ச்சியினை குப்தர்கள் கால சிற்பங்களின் மூலம் நாம் அறியலாம். சாரநாத்திலும், மதுராவிலும் புத்தருக்குச் சிலைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. தியோகர் என்னுமிடத்தில் விஷ்ணுவிற்குக் கற்கோவில், வடமதுராவில் உள்ள திருமாலின் சிற்பம், உதயகிரி குகைவாயிலில் உள்ள

தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறையின்கீழ் இயங்கும் பள்ளிகளில் **"தொன்மைப் பாதுகாப்புமன்றம்"** தொடங்கப்பட்டு நம் பண்பாட்டு அடையாளத்தையும் பாரம்பரியத்தையும் தொன்மையையும் பாதுகாத்து வருகிறது.



XII Ethics_Lesson 10.indd 248 12-12-2021 21:54:42

திருமாலின் வராக அவதார புடைப்புச்சிற்பம், பித்தார்கான்கோயிலில் காணப்படும் புராணக்கதைகள் கூறும் சுடுமண் சிற்பங்கள், தசாவதாரக் கோயிலின் நுழைவாயிலில் இருபுறமும் உள்ள கங்கை, யமுனை சிற்பங்கள் போன்றவை குப்தர் கால சிற்பங்களுக்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன.

இராஷ்டிரகூடர் காலசிற்பங்கள் புகழ்பெற்றவையாகும். எல்லோரா, எலிபெண்டா குகைகளில் காணப்படும் பைரவர், கைலாயமலையை இராவணன் தூக்கும் காட்சி, நடனமாடும் சிவன், பாடல் கேட்டு மகிழும் விஷ்ணு மற்றும் லெட்சுமி சிற்பங்கள் இந்திய சிற்பக்கலையின் மேன்மையைப் போற்றுகின்றன.



தியோகர்



பொம்மலாட்டம்

## இந்தியக் கட்டடக்கலை

### லிங்கராஜா கோயில்

ஒடிசா மாநிலத்தின் தலைநகரான புவனேஸ்வரில் கி.பி.(பொ.ஆ.)11–ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோயிலாகும். அனந்தவர்மன் காலத்தில் இக்கோயில் கட்டுவதற்கான நிலம் கொடையாக வழங்கப்பட்டது. இக்கோயிலின் வழிபாட்டுக்கூடம் ஜெக்மோகனா என்றழைக்கப்படுகிறது. இக்கோயில் அமைந்துள்ள புவனேஸ்வர் நகரம் ஒடிசாவின் கோயில் நகரம் என்று அழைக்கப்படுகின்றது.

மனித நாகரிக வளர்ச்சியின் சிறப்பு கூறுகளில் ஒன்று, கட்டடக்கலை. மனித இனத்தின் பண்பாட்டினை அவ்வினத்தின் கலையமைப்பினைக் கொண்டே கணக்கிடலாம். கட்டடக்கலை சின்னங்களே மனித இனத்தின் பல்வேறு கால வளர்ச்சியினை எடுத்துக் காட்டுகின்றன. இந்தியக் கட்டடக்கலையானது, பெரும்பாலும் அந்தந்தப்பகுதிகளைச் சார்ந்த சமூக பண்பாட்டின் வெளிப்பாடாக அமைந்துள்ளது.

பொதுவாக இந்தியக் கட்டடக்கலையை வட இந்தியக் கட்டடக் கலை, தென் இந்தியக் கட்டடக்கலை என்று இரு பிரிவாக பிரிக்கலாம். இந்த இரு கட்டடக் கலைகளுக்கும் இடையில் பல்வேறு விதமான வேறுபாடுகள் காணப்படுகின்றன. தென்னிந்தியக் கட்டடக்கலையின் சிறப்பம்சம் உயர்கோபுரங்களும், சிற்பங்களும், மண்டபங்களும், தூண்களுமேயாகும். இச்சிறப்புமிக்க கோயில் கட்டமைப்புகள் திடீரென்று வந்தவை அல்ல. இவை, சுமார் 1500 ஆண்டு காலம் சிறிது சிறிதாக முன்னேறி வந்துள்ளன. இந்தியக் கட்டடக்கலை வளர்ச்சிக்கு முதலில் வித்திட்டவர்கள் பௌத்தர்களும், சமணர்களும் ஆவர். மௌரியர்கள், இந்தியாவில் பௌத்த



XII Ethics_Lesson 10.indd 249 12-12-2021 21:54:43

கட்டடக்கலையைத் தொடங்கி வைத்தனர். பின்னர் வந்த குப்தர்களும் சமயம்சார்ந்த கோயில்கலையை வளர்த்தனர். தமிழகத்தில் இப்பணியைத் தொடங்கியவர்கள் பல்லவர்களேயாவர்.

### நாட்டுப்புறக் கலைகள்

ஒரு நாட்டின் கலை மற்றும் பண்பாடு அச்சமூகத்தினை வெளிப்படுத்தும் சிறந்த கருவியாகும். கலை என்பது பொழுதுபோக்கிற்காக மட்டுமன்றித் தகவல் ஊடகமாகவும், பண்பாட்டு ஊடகமாகவும் திகழ்கின்றது. கலை என்பது, மன உணர்வுகளின் வெளிப்பாடாகும். குறிப்பாக, நாட்டுப்புறக்கலைகள் நமது வாழ்வியலோடு தொடர்புடையவை, நமது பாரம்பரியத்தைப் வெளிப்படுத்துபவை. இக்கலைகள், சமூக வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் சிறந்த கருவியாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நமது முன்னோர்களின் நம்பிக்கைகள், எண்ணங்கள், சிந்தனைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை நாட்டுப்புறக் கலைகளின் வாயிலாக அறிய முடிகிறது.

மலேஷியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு தமிழகத்திலிருந்தே கரகாட்டம், காவடியாட்டம், அலகு குத்தியாடுதல் போன்ற கலைகள் சென்றன. தமிழகத்திலிருந்தே தைப்பூசம், பொங்கல் போன்ற பண்பாடுச்சார்ந்த பண்டிகைகளும் அங்குச் சென்று, அங்குள்ள தமிழர்களால் கொண்டாடப்படுகின்றன.

### பிறகொடைகள்

உலகிற்கு இந்தியா வழங்கிய கொடைகள் அளப்பரியன. உலக அமைதிக்கும், மகிழ்ச்சிக்கும் ஊன்றுகோலாய் அமைந்தது. மேலும், இது பல கொடைகளை வழங்கியுள்ளது. நறுமணப் பொருள்களான மஞ்சள், ஏலக்காய், சந்தனம், கிராம்பு போன்ற பொருள்களையும், மருத்துவப் பொருட்களையும் கண்டறிந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தது.

ஜனநாயக முறைப்படி தேர்தலை நடத்திப் பெருமை பெற்றுள்ள இந்தியா, பிறநாடுகளுக்கு வழிகாட்டியாகவும் திகழ்கின்றது. சோழர்காலத்தில் ஜனநாயக முறைப்படி **"குடவோலை தேர்தல் முறை"** நடைபெற்றுள்ளதை உத்திரமேரூர் கல்வெட்டு கூறுகிறது. இஃது இந்தியாவிற்கு மேலும் பெருமை சேர்க்கிறது.

அறிவியல், இலக்கியம், அமைதி, மருத்துவம் போன்ற துறைகளில் உலகப் புகழ்பெற்ற அறிஞர் பெருமக்களைக் கொண்டது இந்தியாவாகும். சர்.சி.வி. இராமன், ஹர்கோவிந்தகொரானா, சுப்ரமணியம்சந்திரசேகர், வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன் போன்றவர்கள் மருத்துவம் மற்றும் அறிவியலிலும், இரவீந்திரநாத் தாகூர் இலக்கியத்திலும், அமர்த்தியாசென் பொருளாதாரத்திலும், அன்னை தெரசாவுக்கு அமைதிக்காகவும் நோபல் பரிசு பெற்று இந்தியாவிற்குப் புகழ்சேர்த்தனர். தாவரவியலில் ஜெகதீஸ்சந்திரபோஸும், பூஜ்யத்தின் மதிப்பைப் பரப்பிய சீனிவாசஇராமானுஜமும், இசைக்காக ஏ.ஆர்.ரஹ்மானும் விளையாட்டுத்துறையில் விஸ்வநாதன் ஆனந்த்தும் இந்தியாவின் பெருமையை உலகறியச் செய்தனர்.



### நிறைவுரை

உலக மக்களுக்கு அமைதி, ஆனந்தம், சகிப்புத்தன்மை மற்றும் முழுமையான வாழ்க்கையை ஏற்படுத்தித் தந்தது இந்தியப் பண்பாட்டின் மிகப்பெரிய கொடையாகும். இந்தியப் பண்பாட்டின் மிகமுக்கிய கூறு **"தன்னை அறிதல்"** (Know Yourself) என்ற வாழ்க்கையின் குறிக்கோளை அடைவதேயாகும். எவ்வளவு பொருள், செல்வம் இருப்பினும் சாதாரண வாழ்க்கை முறை (Simple Life) இயற்கையோடு இணைந்த வாழ்வு, அனைத்துயிர்களும் இறைவனின் அம்சம், உலக மக்கள் அனைவரும் 'ஒரே குடும்பம்' என்ற கொள்கையும் உலகிற்கு இந்தியா அளித்துள்ளது என்று சொல்வதில் நாம் பெருமையடையலாம்.



XII Ethics_Lesson 10.indd 250 12-12-2021 21:54:43

# பயிற்சி

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. இந்தியப் பண்பாட்டின் 'ஆணிவேர்' எனக் குறிப்பிடப்படுவது

   அ) கலை ஆ) ஆன்மிகம் இ) யோகா ஈ) மருத்துவம்

2. விடுபட்ட இடத்தில் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

   1) சரகர் – சரகசம்ஹிதா 2) சுசுருதர் – சுசுருதசம்ஹிதா

   3) அக்னி வேசர் – அக்னிவேச தந்திரா 4) வாக்பட்டர் – _________

   அ) ஆயுர்வேதம் ஆ) அஷ்டாங்கஹிருதயா

   இ) இரசவாதமுறை ஈ) யுனானி

3. பின்வரும் கூற்றுகளில் **பிரம்மகுப்தருக்குப்** பொருத்தமில்லாததைச் சுட்டிக்காட்டுக.

   அ) இயற்கணிதம் பயன்படுத்திய முதல் இந்தியர்

   ஆ) பூஜியத்தின் பயனை உலகுக்கு உணர்த்தியவர்

   இ) சித்தாந்த சிரோன்மணி என்னும் நூலை எழுதியவர்

   ஈ) குப்தர் காலத்தில் வாழ்ந்த கணிதமேதை

4. இந்திய இசையின் சாரமாகத் திகழும் வேதத்தைத் தேர்ந்தெடுக்க.

   அ) ரிக் ஆ) யஜூர் இ) சாமம் ஈ) அதர்வணம்

5. பின்வரும் கூற்றுகளைப் படித்துச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

   கூற்று – 1: தமிழ்நாட்டுக்குரிய சிறந்த நடனங்களுள் ஒன்று பரதம்

   கூற்று – 2: பரத முனிவரால் உருவாக்கப்பட்டதால், இந்நடனம் பரதம் எனப் பெயர் பெற்றது.

   அ) கூற்று 1, கூற்று 2 தவறானவை ஆ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

   இ) கூற்று 1, கூற்று 2 சரியானவை ஈ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

6. பின்வரும் கூற்றையும் காரணத்தையும் படித்துச் சரியான விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

   கூற்று : பஞ்சமுக வாத்தியம் என்பது, காரணப்பெயராக அமைந்துள்ளது. 'பஞ்ச' என்றால், ஐந்து என்பது பொருள்.

   காரணம் : குடம் வடிவத்திலுள்ள இவ்வாத்தியத்தில் மூடப்பட்ட ஐந்து வாய்கள் இருக்கும்.

   அ) கூற்று சரி, காரணம் போதுமானதன்று ஆ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு

   இ) கூற்று, காரணம் இரண்டுமே சரி ஈ) கூற்று சரி, காரணம் தவறு

7. வானவியலிலும் கணிதத்திலும் சிறந்து விளங்கியவர்களைத் தேர்ந்தெடுக்க.

   1) ஆரிய பட்டர் 2) வராகமிகிரர் 3) பிரம்மகுப்தர் 4) பாஸ்கரர்

   அ) 1, 2, 3 சரியானவை ஆ) 2, 3, 4 சரியானவை

   இ) 1, 3, 4 சரியானவை ஈ) 1, 2, 4 சரியானவை

8. சரியாகப் பொருத்தப்பட்டுள்ள விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

   அ) கதகளி – 1) கேரளா ஆ) யக்ஷகானம் – 2) பீகார்

   இ) குச்சிப்புடி – 3) கருநாடகா ஈ) பிதஸியம் – 4) ஆந்திரா

   அ) அ – 1, ஆ – 2, இ – 3, ஈ – 4 ஆ) அ – 2, ஆ – 3, இ – 4, ஈ – 1

   இ) அ – 4, ஆ – 1, இ – 2, ஈ – 3 ஈ) அ – 1, ஆ – 3, இ – 4, ஈ – 2



XII Ethics_Lesson 10.indd 251 12-12-2021 21:54:43

9. பின்வரும் தொடருக்குப் பொருத்தமான விளக்கத்தைக் கண்டறிக.

முதலாம் மகேந்திர வர்மன் 'சித்திரகாரப்புலி' என்று அறியப்படுகிறார். காரணம்,

1) ஓவியக்கலைக்கு ஊக்கமளித்தார்

2) தட்சணசித்திரம் என்ற ஓவிய நூலுக்கு உரை எழுதினார்

3) சித்திரம் வரைவதில் வல்லவராக விளங்கினார்

4) இதிகாச நிகழ்வுகளை ஓவியங்களாக வரையச்செய்தார்

அ) 1, 2, 3 சரியானவை ஆ) 1, 3, 4 சரியானவை இ) 1, 2, 4 சரியானவை ஈ) 2, 3, 4 சரியானவை

10. பொருத்துக.

அ) சர். சி. வி. இராமன் – 1) கணிதம்

ஆ) இரவீந்திர நாத தாகூர் – 2) பொருளாதாரம்

இ) அமர்த்தியாசென் – 3) இலக்கியம்

ஈ) சீனிவாச இராமானுஜம் – 4) அறிவியல்

அ) அ – 1, ஆ – 2, இ – 3, ஈ – 4 ஆ) அ – 2, ஆ – 1, இ – 4, ஈ – 3

இ) அ – 4, ஆ – 3, இ – 2, ஈ – 1 ஈ அ – 3, ஆ – 4, இ – 1, ஈ – 2

## சிறுவினா

1. 'அறம்' என்ற சொல்லுக்குத் தமிழ் இலக்கிய அகராதி கூறும் பொருள்களைக் குறிப்பிடுக.
2. 'சனாதனதருமம்' என்றால் என்ன?
3. இந்திய வானவியலுக்கு ஆரியபட்டர் அளித்த கொடை யாது?
4. பதினெண்சித்தர்களுள் நால்வர் பெயரைக் குறிப்பிடுக.
5. இந்தியக் கணிதவியலுக்குப் பிரம்மகுப்தர் ஆற்றிய பங்களிப்பை எழுதுக.
6. மோகினி ஆட்டம் – குறிப்பு வரைக.
7. குஜராத் மாநிலத்தின் பாரம்பரிய நடனங்கள் யாவை?
8. இந்திய ஓவியக்கலையின் சிறப்பை வெளிப்படுத்தும் இடங்களுள் எவையேனும் இரண்டைக் குறிப்பிடுக.
9. உத்திரமேரூர் கல்வெட்டு குறிப்பிடும் செய்தி யாது?
10. லிங்கராஜா கோவில் எங்கு அமைந்துள்ளது? அதன் சிறப்பு யாது?

## குறுவினா

1. தொல்காப்பியரின் அறக்கோட்பாட்டை விளக்குக.
2. 'எல்லாப் பொருளும் இதன்பால் உள' எனச் சிறப்பிக்கப்பெறும் அறநூல் யாது? அதன் சிறப்புகளைப் பட்டியலிடுக.
3. 'பஞ்சசீலக் கொள்கை' – குறிப்பு வரைக.
4. பஞ்சமுக வாத்தியத்தின் சிறப்பு யாது?
5. 'யக்ஷகானம்' எந்த மாநிலத்தின் நடனமாகும்? அந்நடனத்தின்வழி விளக்கப்படும் கருத்துகள் யாவை?
6. இந்திய ஓவியக்கலைக்கு முகலாய ஓவிய பாணியின் பங்களிப்பை விவரிக்க.

## நெடுவினா

1. உலகிற்கு இந்தியப் பண்பாட்டின் கொடைகளுள் 'அறக்கோட்பாடுகள்' பெறுமிடத்தை விளக்குக.
2. 'யோகப் பயிற்சியினால் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை பெறமுடிகிறது' – இக்கூற்றை நிறுவுக.
3. இந்திய வானவியலிலும் கணிதவியலிலும் சிறந்து விளங்கிய அறிஞர்களையும் அவர்களின் பங்களிப்பையும் தொகுத்து எழுதுக.
4. இந்திய மருத்துவம், உலகிற்கு அளித்த கொடைகளைப் பட்டியலிடுக.
5. 'இந்தியாவின் தொன்மை வரலாற்றையும் பண்டைக்கால மக்களின் பண்பாட்டையும் சிற்பக்கலைகள் வாயிலாக அறிந்துகொள்ளலாம்' – இக்கூற்றை விளக்குக.



XII Ethics_Lesson 10.indd 252 12-12-2021 21:54:44

இணையச்செயல்பாடு

## உலகிற்கு இந்தியப் பண்பாட்டின் கொடை


இந்தியாவின் கலை மற்றும் கட்டடக்கலை பற்றி அறிவோமா?



### படிகள்

1. கீழ்க்காணும் உரலி/விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி, இச்செயல்பாட்டிற்கான இணையப்பக்கத்திற்குச் செல்க.
2. அந்தப்பக்கத்தில், இந்தியாவின் கட்டடக்கலையின் சிறப்பைத் தெரிந்து கொள்ளலாம்.
3. தங்களுக்குத் தேவையான பக்கத்திற்குச் சென்று, மேலும் அறிந்து கொள்க.

### செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :




படி 1




படி 2

இந்தியாவின் கலை, கட்டடக்கலை இணையப்பக்கத்திற்கான உரலி :
http://www.tamilvu.org/tdb/arts_tamildb/pdf/rkannan/11.parai_oviyam_matturm_kugaikalai.pdf

* படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.



XII Ethics_Lesson 10.indd 253 12-12-2021 21:54:44

# கலைச்சொற்கள்

| | |
|---|---|
| Abiotic | உயிரற்றவை |
| Aboriginal | பழங்குடியினர் |
| Administration | நிருவாகம் |
| Adoption | மகவேற்பு |
| Antiquity | பழங்கால பொருள்கள் |
| Archaeology | தொல்லியல் |
| Architecture | கட்டடக்கலை |
| Architect | கட்டடக் கலைஞர் |
| Asceticism | துறவறம் |
| Autobiography | சுயசரிதம் |
| Bhakti movement | பக்தி இயக்கம் |
| Bio diversity | பல்லுயிரினம் |
| Biotic | உயிருள்ள |
| Bond | பந்தம் |
| Cavalry | குதிரைப்படை |
| Cave Temple | குகைக்கோயில் |
| Cemetery | கல்லறை |
| Chariortry | தேர்ப்படை |
| Chief tains | குறுநில மன்னர்கள் |
| Chronology | காலவரிசை |
| Civilization | நாகரிகம் |
| Contemporary | சமகாலம் |
| Culture | பண்பாடு |
| Custom | பழக்கவழக்கம் |
| Detachment level | பற்றற்ற நிலை |
| Diversity | பன்முகத்தன்மை |
| Document | ஆவணம் |
| Ecology | சுற்றுப்புறவியல் |

| | |
|---|---|
| Elephantry | யானைப்படை |
| Empire | பேரரசு |
| Enormous | அளப்பரியது |
| Epics | காப்பியங்கள் |
| Epigraphy | கல்வெட்டியல் |
| Ethnic | இனக்குழு |
| Ethnic Museum | இன அருங்காட்சியகம் |
| Feudal System | நிலமானியம் |
| Fine Arts | நுண்கலைகள் |
| Flexibility | நெகிழ்வுதன்மை |
| Franchise | வாக்குரிமை |
| Genealogy | மரபியல் |
| Green constant plants | பசுமைமாறாத் தாவரங்கள் |
| Harmony | நல்லிணக்கம் |
| Human Environment | மனிதச் சூழல் |
| Humanity | மனிதநேயம் |
| Iconography | படிமவியல் |
| Immigration | குடியேற்றம் |
| Imperialism | ஏகாதிபத்தியம் |
| Individual duty | தனிமனிதக்கடமை |
| Inscription | கல்வெட்டு |
| Interregnum | இடையாட்சி காலம் |
| Legacy | மரபுரிமை |
| Logical | தருக்கவியல் |
| Manuscript | கையெழுத்துப்பிரதி |
| Meditation | தியானம் |
| Miniature | சிறிய உருவம் |



Kalaichorkal.indd 254 12-12-2021 21:54:19

| | |
|---|---|
| Moanarchy | முடியாட்சி |
| Modestly | தன்னடக்கம் |
| Monasteries | மடங்கள் |
| Monotheism | ஒரு கடவுள் கோட்பாடு |
| Natural calamities | இயற்கைப் பேரழிவுகள் |
| Natural resources | இயற்கை வளங்கள் |
| Non–violence | அகிம்சை |
| Numismatics | நாணயவியல் |
| Optimism | நன்னம்பிக்கை |
| Origin | தோற்றம் |
| Ornaments | ஆபரணங்கள் |
| Passes | கணவாய் |
| Philosophy | தத்துவம் |
| Physiological | உடற் செயலியல் |
| Pilgrimage | புனிதப் பயணம் |
| Polytheism | பல கடவுள் கோட்பாடு |
| Pranayama | உயிர் மூச்சைக் கட்டுப்படுத்துதல் |
| Psychological | உளவியல் தொடர்பான |
| Reflection | பிரதிபலிப்பு |
| Reform | சீர்திருத்தம் |
| Reincarnation | மறுபிறவி |
| Religious principle | சமயக் கோட்பாடு |
| Renaissance | மறுமலர்ச்சி |
| Reformist | சமூகச் சீர்திருத்தவாதி |
| Rituals | சடங்குகள் |
| Sacrifice | தியாகம் |
| Saint | மகான் |
| Salvation | வீடுபேறு |
| Sanity | நல்லறிவு |

| | |
|---|---|
| Sati | உடன்கட்டையேறுதல் |
| Sculptor | சிற்பி |
| Sculpture | சிற்பம் |
| Secular | மதச்சார்பற்ற |
| Sigillography | முத்திரையியல் |
| Skyscrapers | வானளாவியக் கட்டடக் கலை |
| Social duty | சமூகக்கடமை |
| Soul | ஆன்மா |
| Spirituality | ஆன்மிகம் |
| Spread | பரவல் |
| Superstition | மூடநம்பிக்கை |
| The five elements | பஞ்ச பூதங்கள் |
| The five senses | ஐம்புலன்கள் |
| Therapeutic | நோய் நீக்கும் |
| Tolerance | சகிப்புத்தன்மை |
| Topography | நில அமையியல் (நில உருவ இயல்) |
| Tourism | சுற்றுலாவியல் |
| Treasury | கருவூலம் |
| Universe | பிரபஞ்சம் |
| Western Civilization | மேலைநாட்டு நாகரிகம் |
| Weather | காலநிலை |
| Western thoughts | மேற்கத்திய சிந்தனைகள் |
| WHO | உலகச் சுகாதார நிறுவனம் |
| Wisdom | ஞானம் |
| World Religious Conference | உலக சமய மாநாடு |
| Worship | வழிபாடு |
| Western Education | மேற்கத்திய கல்வி |



# பார்வை நூல்கள்


1. அறிவியல் தொழில் நுட்ப வரலாறு : Dr. தங்கசாமி
2. ஆசானா, பிராணயாமா, முத்ரா, பந்தா, பீகார் யோகா பாரதி, முங்கர் – சுவாமி சத்தியானந்தா சரஸ்வதி (1997).
3. ஆக்ஸ்போர்டின் இந்திய வரலாறு – Vol – II– V.A. ஸ்மித் – தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
4. ஆரோக்கிய வாழ்வு – இரா. ஆண்டியப்பன், (2001), பாரதி பதிப்பகம், சென்னை – 17.
5. இந்துசமய இணைப்பு – சைவம், வைணவம் – ஆறுமுக நாவலர்
6. இந்தியக் கலை வரலாறு – கோ. தங்கவேலு – தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
7. இந்தியச் சமயங்களும் தத்துவங்களும் அறிமுகம் துரை. சீனுச்சாமி
8. இந்தியாவின் சிறப்பு வரலாறு – R.C. மஜும்தார், H.C. ராய்சௌதுரி, K. தத்தா, மொழியாக்கம் – தி.வெ.குப்புசாமி – தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
9. இந்திய தேசியப் பண்பாடு – Habid Hussian
10. இந்தியப் பண்பாடு பழைய பாடநூல் –1996 தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்
11. இந்திய வரலாறு – கோ. தங்கவேலு
12. இந்தியப் பண்பாட்டு வரலாறு – ந. சுப்பிரமணியன்
13. இந்திய வரலாறு இரண்டாம் பகுதி – கி.ர. அனுமந்தன், ந.க. மங்கள முருகேசன்
14. இராசராசேச்சுரம் – நடன காசிநாதன் தமிழ் நாடு அரசு தொல்லியல் துறை வெளியீடு
15. சுற்றுச் சூழல்கல்வி – த. சம்பத்குமார் – உதவிப் பேராசிரியர்
16. சுற்றுச்சூழல் பாதுகாப்பு – முனைவர் ந.க.மங்களமுருகேசன்
17. சுற்றுச் சூழல்கல்வி – ABM மீனாகுமாரி பேராசிரியர்
18. டில்லி சுல்தானியத்தின் வரலாறு Vol – I– T.R. ராமச்சந்திரன் – தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
19. தமிழ்க் கோவில்கள் தமிழர் பண்பாடு – தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்
20. தத்துவமும் பண்பாடும் – பாஸ்கரன்.க
21. தமிழர் வரலாறும் பண்பாடும் – நா. வானமாமலை
22. தமிழர் பண்பாடும் தத்துவமும் – நா. வானமாமலை
23. தமிழ்நாட்டு வரலாறு – சோழ பெருவேந்தர் காலம் (கி.பி 900 முதல் – 1300 வரை) தமிழ் வளர்ச்சி துறை வெளியீடு
24. தியானயோகம் – S. ஜனார்த்தன், (2000), RKM எண்டர் பிரைசஸ், சென்னை –6.
25. திருமந்திரம் – ஞா. மாணிக்கவாசகன் பத்தாம் பதிப்பு 2016 உமா பதிப்பகம்
26. பஞ்சபூதப் பாதுகாப்பு – முனைவர் ச.மி. ஜான்கென்னடி
27. பண்பாட்டு மானிடவியல் – பக்தவத்சல பாரதி
28. பண்டைய இந்தியா D.D. கோசாம்பி தமிழாக்கம் R.S. நாராயணன் என்கிற S.R.N. சத்யா.




Kalaichorkal.indd 256 12-12-2021 21:54:19

29. பிற்கால சோழர் சரித்திரம் – **தி. வை. சதாசிவ பண்டாரத்தார்**
30. புதிய கால இந்தியவரலாறு – **சத்திய நாத அய்யர்** Vol III
31. பௌத்தமும் தமிழும், சமணமும் தமிழும் – **மயிலை சீனி. வேங்கடசாமி**
32. வட இந்திய வரலாறு – (ஹர்ஷரது மரணம் முதல் கி.பி. 1206 வரை) – **தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்**
33. விஜயநகரப் பேரரசின் வரலாறு – **டாக்டர். அ. கிருஷ்ணசாமி, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.**
34. யோகாசனமும் இயற்கை உணவும், **தாமரை பப்ளிகேஷன்**(Pvt Ltd), அருணாசல சாமிகண்ணு, (2006) **சென்னை – 98.**
35. யோகா – உடல்நலம் மற்றும் உடற்கல்வி **– முனைவர் ச. பீட்டர் ஆனந்த்**, சம்யூத்தா (2016) பப்ளிகேஷன், சேலம்–04.
36. A consise History of South India – Noberu Karashima Oxford press
37. An Advanced History of India – R.C. Majumdar – Raychudhary – Trinity Press
38. An Advanced History of India – R.C. Majumdar, Raychaudari, Trinity press
39. Contemparary Indian Philosophy – Basant Kumar LAL.
40. Evolution of Indian Culture – Luniya .B.L
41. Evolution of Indian Culture – Pandey and Singh
42. History of Ancient India – J.L Metha – Lotus Press
43. History of Ancient India – L.P Sharma – Konark Publication
44. History of Ancient India – V.D. Mahajan – Chand Publication
45. History of Medieval India – 1000 – 1761 – L.P.Sharma – Konark Publications
46. History of Medival India – Sathish Chandra
47. History of Modern India – BL. Grover. Alka Metha (p.p 273–291)
48. History of Religion – Pramod Thakur.
49. http://mathi accademy.blog sport.com.
50. http://www.tamilvu.org/library/nationalized/PDF
51. Inidan cultural and Heritage – Binod Bihari Satpatay
52. Oxford History of India –V.A Smith – Tamilnadu text book corporation publication
53. Scott (2001) P.6 citing Harris Marvin (2001) Our kind; who we are where we came from. P.P 213–226.
54. South Asian Politics and Religius – V.A. Smith
55. The Cultural Heritage of India – DR. Sarvepalli Radha Krishnan/
56. The Hidhu view of life – Dr. S. Rathakrishnan
57. The Mughal Empire – Dr. A. L. Srivastava – Shiva Lal Agarwala & Co Pvt LTD, Agra
58. The oxford history of India – V.A. Smith Vol III
59. The Repressentation of Sati; by Robert. L; Hard Grave . Jr



Kalaichorkal.indd 257 12-12-2021 21:54:19